முருகப்பெருமான் துணை

**மகான் கணராமர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே தரணி காத்திட
தணிகாசலன் மகா சக்தியாக
அவதாரம் எடுத்த அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சிலை திங்கள்
குறைவிலா இருபான்நவ திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29 ம் நாள், 14.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
வரமென துல்லிய ஆசிதனை
வழங்குவேன் கணராமர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அன்னதான வழிகளை
ஞானவழிகளாக தரும வழிகளாக
நம்பிக்கை வைத்து வருதலுற
4. வருதலுற அரங்கன் வழிகாட்டலில்
வல்லமைபட மக்கள் படைகள்
தருமபலம் கொண்டவர்களாகத் தேறி
தரணியில் அரங்கன் ஆசிபட
5. ஆசிபட அனுகுவார் அனைவரும்
ஆக்கினை கரும வினையென
நேசமிலா சிக்கல் அனைத்தையும்
நிலமதனில் விரட்டி மீள்வர்
6. மீள்வர் புண்ணியவான்களாக
மீள்வர் ஞான வான்களாக
ஆளுமை சக்திகள் அதிகாரிகளென
அனைவரும் அனுகி வரவே

7. அனுகிவரவே அவரவர்க்கும் மாற்றம்
ஆன்மீக ஞான பலமாகி
ஞான சேவையாக நல்லாட்சிதரும்
நம்பிக்கை கொண்ட சக்தியாக மாறுவர்

8. மாறவே இந்த கலியுகத்தில்
மாற்றம் அரங்கன் அவதாரமாக
கூறவே எங்கும் தருமவான்கள்
குறையிலா வண்ணம் பரவி

9. பரவியே செயல்பாடுகள் எல்லாம்
பரோபகாரம் நிறைந்த வகை
அறம் குன்றா சகல துறையும்
ஆளுமை சிறக்க வளர்ச்சி காணும்

10. காணவே அற்புதம் பல
கந்த வேலன் அவதாரமான
ஞான தேசிகனால் நடக்க இருக்க
நம்பிக்கை கொண்டு மக்கள்வர

11. வருகவே வருங்காலம் ஞானிகள்
வழிகாட்டும் ஞான ஆட்சியாக
தருமவான்கள் ஆளுமையாக மாறும்
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—